பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
27 05 2025 **TUESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவளிப்பது, ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விளக்கும் இந்திய தூதுக்குழுவினர் பிரான்ஸ், சிங்கப்பூர், ஸ்லோவேனியா, கயானா நாடுகளில் பயணம் மேற்கொண்டனர்.
3. வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலவரம்பு வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
4. அடுத்த மாதத்தில் மழைப் பொழிவு வழக்கத்தை விட 108 சதவீதம் அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து, எச்.எஸ்.பிரணாய் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>><<<<<**

இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவளிப்பது, ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், இந்தியாவுக்கு எதிரான மறைமுகப் போர், திட்டமிட்டு நடத்தப்படுவதாக கூறினார்.

இந்திய மண்ணில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களுக்கு பாகிஸ்தானில் அரசு மரியாதை அளிக்கப்படுவது வேதனை அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

தீவிரவாதிகள் உயிரிழந்தால், அவர்களுக்கு அந்நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டு ராணுவ மரியாதை அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக அந்நாட்டிலிருந்து செயல்படும் தீவிரவாதிகளின் செயல்பாடுகளை, அந்நாட்டு ராணுவம் ஒருங்கிணைத்து வருவதை இதுபோன்ற செயல்கள் ஆதாரப்பூர்வமாக நிரூபிப்பதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு நாட்டுடனும் பகைமை பாராட்டுவதை இந்தியா விரும்பவில்லை என்றும், அமைதியை மட்டுமே நாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒட்டு மொத்த உலகின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும், இந்தியா பாடுபட்டு வருவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

**>>>>><<<<<**

தீவிரவாதத்திற்கு பாகிஸ்தான் அளித்து வரும் ஆதரவை உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கும் விதத்தில் இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவினர் பல்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

பிரான்ஸ் சென்றுள்ள பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் அந்நாட்டு தலைநகரில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர்.

தீவிரவாத்தை எந்த வடிவிலும் அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக திரு. ரவிசங்கர் பிரசாத் கூறினார்.

இந்த பிரச்சினைக்கு எதிராக உலக நாடுகள் ஒருமித்த குரலை எழுப்ப வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, பாகிஸ்தானில் உள்ள பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு, துல்லியமாக தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் விவரித்தார்.

தீவிரவாத முகாம்கள் பாகிஸ்தான் விமான தளங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடைபெற்றதை அவர் குறிப்பிட்டார்.

ஆப்பரேசன் சிந்தூர், பாகிஸ்தானிலிருந்து செயல்படும் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எல்லைதாண்டிய தீவிரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இதனை அனைத்து நாடுகளும் வலியுறுத்த வேண்டும் என்றும் திரு. ரவிசங்கர் பிரசாத் கேட்டுக் கொண்டார்.

ஸ்லோவேனியாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ள திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான தூதுக்குழுவினர், அந்நாட்டின் தேசிய சபையின் தலைவர் திரு. **Mark Lotric-**கை சந்தித்து பேசினர்.

தீவிரவாதத்தை அனுமதிப்பதில்லை என்ற உறுதிப்பாட்டில் இந்தியா நிலையாக உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தென்அமெரிக்க நாடான கயானா சென்றுள்ள காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும், அதற்கு தக்க பதிலடி கொடுப்பதற்கும் இந்தியாவிற்கு முழுஉரிமை உள்ளதாக அவர்கள் கயானா நாட்டு தலைவர்களிடம் தெரிவித்தனர்.

கயானா - இந்தியா இடையேயான புரிந்துணர்வு முழுஅளவில் இருப்பதாகவும், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு முழுஆதரவை கயானா அளிக்கும் என்ற நம்பிக்கை தங்களுக்கு உள்ளதாகவும் திரு. சசிதரூர் தெரிவித்தார்.

கயானா அதிபர் திரு. முஹமது இர்ஃபான் அலி-யை தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசினர்.

மனிதகுல மாண்பை சிதைக்கும் தீவிரவாதத்தை எந்தவொரு வடிவிலும் கயானா எதிர்ப்பதாக அதிபர் திரு. முஹமது இர்ஃபான் அலி கூறினார்.

கயானா நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் திரு. **Manzoor Nadir** –ஐ சந்தித்து ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும், இந்தியாவில் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் தூதுக்குழுவினர் எடுத்துரைத்தனர்.

சிங்கப்பூர் சென்றுள்ள ஐக்கிய ஜனதா தள் உறுப்பினர் திரு. சஞ்சய்குமார் ஜா தலைமையிலான குழுவினர், அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி. **Sim Ann-**ஐ சந்தித்து பேசினர்.

தீவிரவாதத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானை மீண்டும் சேர்ப்பதற்கு சிங்கப்பூர் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அந்த குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

பாகிஸ்தானின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி அந்நாட்டின் ராணுவ மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக திரு. சஞ்சய்குமார் ஜா தெரிவித்தார்.

**>>>>><<<<<**

மும்பை மாதவ்பாகில் உள்ள ஸ்ரீலட்சுமி நாராயன் ஆலய நிர்வாகம் நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இந்த ஆலயத்தின் 150வது ஆண்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், கல்வி, மருத்துவம், ஆன்மீகம் மற்றும் சமூகப் பணிகளில் இந்த ஆலய நிர்வாகம் சிறந்து விளங்குவதாக தெரிவித்தார்.

குழந்தைகளுக்கு தாய்மொழி கல்வியை போதிப்பதிலும் இந்த மையம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்தார்.

**>>>>><<<<<**

வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலவரம்பு வரும் செப்டம்பர் மாதம் 15ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள மத்திய நேரடி வரிகள் வாரியம், தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யும் படிவங்களை, மக்கள் முழுமையாக புரிந்து கொண்டு தேவையான விவரங்களை அளிப்பதற்கு ஏதுவாக இந்த காலஅவகாசம் அளிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

புதிய ஐடிஆர் படிவங்களை முறையாக கையாள்வதன் மூலம், வருமான வரி கணக்கை தாக்கல் செய்வது எளிமையாக இருக்கும் என்றும், கணக்குகளும் துல்லியமாக இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை ஏற்று, வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலவரம்பு செப்டம்பர் 15ஆம் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

நிலக்கரி இறக்குமதி கடந்த நிதியாண்டில் 7 புள்ளி ஒன்பது சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த நிதியாண்டில், நிலக்கரி இறக்குமதி 243 மில்லியன் டன்னாக இருந்ததாகவும், இது அதற்கு முந்தைய நிதியாண்டில் 264 மில்லியன் டன்னாக இருந்தாகவும் நிலக்கரி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இறக்குமதி குறைந்துள்ளதன் மூலம், கடந்த நிதியாண்டில் 60ஆயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

பிரிக்ஸ் அமைப்பு, புவி-அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் மட்டுமின்றி நாகரிகத்தைப் போற்றும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பிரேஸிலில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சாரத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், பன்முகத் தன்மையை ஊக்குவித்து மனிதநேயத்தை வலுப்படுத்தக்கூடிய கலாச்சார சூழலியலை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கலாச்சார பாரம்பரியமிக்க பொருட்கள், சட்டவிரோதமாக கடத்தப்படுவதை தடுக்க, வலிமையான சட்ட நடைமுறைகளை உருவாக்க வேண்டும் என்றும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பிரிக்ஸ் நாடுகளிடையேயான கலாச்சார முன்னுரிமை திட்டம் தொடர்பாக கூட்டுப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

மத்திய அரசின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்ட விவசாயிகள் பயனடைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - விவசாயிகள் 33 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

வரும் ஜூன் மாதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழைப் பொழிவு வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய புவி அறிவியல் துறை செயலர் திரு. ரவிச்சந்திரன், சராசரி மழைப்பொழிவு அளவான 166 புள்ளி ஒன்பது ஒன்பது மில்லி மீட்டரை விட 108 சதவீதம் அதிகமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இதனால், வெப்பநிலை கணிசமாக குறையும் என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், தென் மாநிலங்கள் மற்றும் வடமேற்குப் பகுதியின் ஒரு சில இடங்களில் மழை பொழிவு வழக்கத்தை விட குறைவாக இருக்கும் என்றும் திரு. ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து, எச்.எஸ்.பிரணாய் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற மகளிர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் பி.வி. சிந்து கனடாவின் **Wen Yu-Zhang**-ஐ 21-14, 21-9 என்ற செட்கணக்கில் வென்றார்.

ஆடவர் பிரிவில் எச்.எஸ்.பிரணாய், டென்மார்க்கின் **Rasmus Gemke-**ஐ 19-21, 21-16, 21-14 என்ற செட்கணக்கில் வென்றார்.

**>>>>>END<<<<<**